# தமிழ்நாடு தகவல் ஆணையம்

காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி முதல் தளம்,, புது எண் 378, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை சென்னை-600018. (தபால் பெட்டி எண் 6405 தேனாம்பேட்டை)
*தொலைபேசி எண் 24312841.*

<u>வழக்கு எண்.24477/விசாரணை/09</u>

**<u>விசாரணை நாள் 29.01..2010 – இராமநாதபுரம்</u>**

| | |
|---|---|
| முன்னிலை | முனைவர் (திரு) ஆர். பெருமாள்சாமி, எம்.ஏ.,எம்.பில்.,பி.எச்.டி.,<br>மாநில தகவல் ஆணையர் |
| மனுதாரர் | திரு. சு. சொர்ணலிங்கம்<br>த/பெ. சுப்ரமணியன் அம்பலம்<br>3/4, குட்செட் தெரு<br>ரயில்வே ரோடு 2வது குறுக்குத் தெரு<br>அழகப்பாபுரம்<br>காரைக்குடி – 630 003. சிவகங்கை மாவட்டம். |
| பொது அதிகார அமைப்பு | பொதுத் தகவல் அலுவலர்<br>வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) அலுவலகம்<br>சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியம்<br>சாக்கோட்டை, புதுவயல் அஞ்சல்<br>சிவகங்கை மாவட்டம். |

----------

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இவ்வாணையத்தால் இன்று (29.01.2010) நடத்தப்பட்ட விசாரணைக்கு மனுதாரர் திரு. சு. சொர்ணலிங்கம், பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத் தகவல் அலுவலர் திரு. வே. சரவணபவன், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (நிர்வாகம்), சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், சிவகங்கை மாவட்டம் வந்திருந்தனர்.

தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 சட்டப்பிரிவு 6(1)ன் கீழ் மனுதாரர் 13.04.09 அன்று பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பிய மனுவில் சிவகங்கை மாவட்டம், காரைக்குடி வட்டம், சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், பெரிய கொட்டகுடி ஊராட்சியில் 01.10.06 முதல் 31.3.09

முடிய வேலை உறுதியளிப்பு திட்டத்தில் எடுக்கப்பட்ட வேலைகள், இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தில் கட்டப்பட்ட வீடுகள் மற்றும் இதர விவரங்கள் கேட்டல், கூடுதலாக தொகை நிர்ணயம் செய்தது, சட்ட திட்டங்களின்படி தொகை நிர்ணயம் செய்ய வேண்டுதல் சம்பந்தமாக ஒன்பது இனங்களுக்கு தகவல்கள் வழங்குமாறு கோரியிருந்தார். சட்டப்பிரிவு 7(1)ன் கீழ் 30 நாட்களுக்குள் தகவல் பெறாததால், மனுதாரர் சட்டப்பிரிவு 19(1)ன் கீழ் முதல் மேல்முறையீடு செய்யாமல், சட்டப்பிரிவு 19(3)ன் கீழ் 26.05.09 அன்று இவ்வாணையத்திற்கு இரண்டாவது மேல்முறையீடு செய்துள்ளார். இவ்வாணையம் 29.9.09 அன்று பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பிய உத்தரவில் மனுதாரர் கோரிய தகவலை எவ்வித கட்டணமுமின்றி மனுதாரருக்கு வழங்குமாறு உத்தரவிட்டிருந்தது. பொதுத் தகவல் அலுவலர், மனுதாரருக்கு 26.10.09, 19.11.09 மற்றும் 05.12.09 ஆகிய தேதிகளில் தகவல்களை வழங்கியுள்ளார்.

இன்றைய விசாரணையின் போது பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர் கோரிய ஒன்பது இனங்களுக்கும் வழங்கிய தகவல்களின் நகலை இவ்வாணையத்தின் முன் சமர்ப்பித்தார். மனுதாரும் தான் கோரிய ஒன்பது இனத்திற்கும் உள்ள தகவலை முழுமையாக பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து பெற்றுக் கொண்டதாக இவ்வாணையத்தின் முன் தெரிவித்ததன் அடிப்படையில் இவ்வழக்கில் மேலும் விசாரிப்பதற்கு ஏதுமில்லை எனக் கருதி இவ்வழக்கு இத்துடன் முற்றுப் பெறுகிறது.

தமிழ்நாடு தகவல் ஆணையம்.

ஒப்புதல் பெறப்பட்ட நாள் 09.2.2010
ஆணையத்தின் ஆணைப்படி.

உதவிப் பதிவாளர்.

<u>வழக்கு எண்.24477/09</u>

பொதுத் தகவல் அலுவலர்
வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) அலுவலகம்
சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியம்
சாக்கோட்டை, புதுவயல் அஞ்சல்
சிவகங்கை மாவட்டம்.

திரு. சு. சொர்ணலிங்கம்
த/பெ. சுப்ரமணியன் அம்பலம்
3/4, குட்செட் தெரு
ரயில்வே ரோடு 2வது குறுக்குத் தெரு
அழகப்பாபுரம்
காரைக்குடி – 630 003. சிவகங்கை மாவட்டம்.